செ.வெ.எண்: 42 நாள்:23.03.2018

# அரியலூர் மாவட்ட விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் முன்னோடி விவசாயிக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மு.விஜயலட்சுமி, இஆப., அவர்கள் பாராட்டு.

அரியலூர் மாவட்டம், மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில், விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.மு.விஜயலட்சுமி, இஆப.,** அவர்கள் தலைமையில் இன்று (23.03.2018) நடைபெற்றது.

**இக்கூட்டத்தில் அரியலூர் வட்டம், கயர்லாபாத் கிராமத்தைச் சேர்ந்த விவசாயி ரா.சாந்தி, க/பெ.ராஜேந்திரன் அவர்கள் 17.02.2018 அன்று புதுதில்லியில் இந்திய வேளாண்மை ஆராய்ச்சி நிறுவனத்தில் நடைபெற்ற கிருஷி உன்னதி மேளாவில் 2015-16ஆம் ஆண்டில் நெல் தானிய உற்பத்தியில் அதிக மகசூல் பெற்று சாதனை புரிந்தமைக்காக மாண்புமிகு பாரத பிரதமர் அவர்களால் முன்னோடி விவசாயிக்கான விருது வழங்கப்பட்டது. விருது பெற்ற விவசாயி சாந்தி அவர்களை இன்று மாவட்ட ஆட்சியர் அவர்கள் பாராட்டி, கௌரவித்தார்கள். மேலும், விவசாயிகள் அனைத்து வித பயிர்களிலும் அதிக மகசூல் பெற வேண்டும் என மாவட்ட ஆட்சியர் அவர்கள் கேட்டுக்கொண்டார்கள்.**

**இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சியர் அவர்கள் தெரிவித்ததாவது :-**

அரியலூர் மாவட்டத்தின் ஆண்டு சராசரி மழையளவு 954 மி.மீ ஆகும். நடப்பு ஆண்டில் இம்மாதம் இது நாள் வரை 30.30 மி.மீ. மழை பெறப்பட்டுள்ளது.

வேளாண்மை மற்றும் தோட்டக்கலை பயிர்களுக்கு தேவையான 979 மெ.டன் யூரியா, 489 மெ.டன் டி.ஏ.பி, 485 மெ.டன் பொட்டாஷ் மற்றும் 716 மெ.டன் காம்ப்ளக்ஸ் உரங்கள் தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்கள் மற்றும் தனியார் உர விற்பனை மையங்களில் இருப்பில் உள்ளது.

இதுவரை சான்று பெற்ற நெல் விதைகள் வேளாண்மை விரிவாக்க மையங்கள் மூலம் மூலம் 250 மெ.டன், தனியார் விதை விற்பனை மையங்கள் மூலம் 101 மெ.டன் என கூடுதலாக 351 மெ.டன் விநியோகம் செய்யப்பட்டுள்ளது. தற்போது வேளாண்மை விரிவாக்க மையங்களில் 6 மெ.டன் மற்றும் தனியார் கடைகளில் 1 மெ.டன் ஆக மொத்தம் 7 மெ.டன் நெல் விதைகள் கையிருப்பில் உள்ளது.

**மானிய விலையில் நுண்ணீர் பாசனத் திட்டம் -** தற்போது பருவமழை குறைவாக கிடைத்து வருவதால் நிலத்தடி நீரின் பயன்பாடு அதிகரித்து வருகிறது. அதற்கு ஏற்றாற் போல் வேளாண் துறையில் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகிறது. நிலத்தடி நீரை சிக்கனமாக பயன்படுத்தி சாகுபடி பரப்பை அதிகரிக்கும் நோக்கோடு வேளாண்துறை மற்றும் தோட்டக்கலைத்துறைகள் மூலம் சொட்டுநீர் மற்றும் தெளிப்புநீர் பாசன கருவிகளை அமைக்க விவசாயிகளுக்கு அரசு மானியமாக நமது மாவட்டத்திற்கு ரூ.7.92 கோடி நிதி இலக்கு ஒதுக்கீடு செய்து பெறப்பட்டுள்ளது.

சிறு / குறு ஆதிதிராவிட விவசாயிகளுக்கு 100 சதவீத மானியத்திலும், இதர விவசாயிகளுக்கு 75 சதவீத மானியத்திலும் பாசன கருவிகளை தங்களது வயல்களில் நிர்மானித்துக்கொள்ள மானியம் அனுமதிக்கப்பட்டு வருகிறது. 75 சதவீத மானியத்தில் பயன்பெறும் இதர விவசாயிகள் மீதிப் பங்குத் தொகையை வங்கி வரைவோலையாக விண்ணபத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும். சிறு/குறு ஆதிதிராவிட விவசாயிகள் வருவாய்த்துறையில் சான்று பெற்று விண்ணப்பிக்க வேண்டும்.

இத்திட்டத்தின் கீழ் விவசாயிகள் பயன்பெற்றிட சொந்த நிலத்தில் பயிர் சாகுபடி செய்து வருவதற்கான சிட்டா மற்றும் அடங்கல், வயல் வரைபடம் மற்றும் மின் இணைப்புடன் நீர் ஆதாரம் உள்ளமைக்கான சான்றுகளுடன் குடும்ப அட்டை, ஆதார் அட்டை போன்ற இதர ஆவணங்களுடன் சம்மந்தப்பட்ட வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் மற்றும் தோட்டக்கலை உதவி இயக்குநர் அலுவலகங்களை அணுகி விண்ணப்பித்து பயன்பெறலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.மு.விஜயலட்சுமி, இஆப.,** அவர்கள் தெரிவித்தார்கள்.

இக்கூட்டத்தில், துணை இயக்குநர் (வேளாண்மை) பழனிசாமி, இணைப்பதிவாளர் (கூட்டுறவுசங்கங்கள்) இரா.தயாளன், பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் (நீர்வளஆதாரம்) ஆ.தெய்வீகன், துணை இயக்குநர் (தோட்டக்கலைத்துறை) அன்புராஜன் மற்றும் அனைத்துத்துறை அலுவலர்கள், ஏராளமான விவசாய சங்க பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**